திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த அரசாங்கத்தின் சார்பில் அந்த விசாரணைக் குழுவிடம் கொடுக்கப்பட்ட கருத்துக்கள் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து அவர்களுடைய கருத்துக்களையும் பெற்று குழுவிடம், சிக்னல் பாயின்ட்களில் பழுது ஏற்படாமல் அடிக்கடி கவனம் செலுத்த வேண்டும் எனவும், தவறு செய்யும் ஊழியர்கள் கண்டிப்பாகத் தண்டனைக்கு உள்ளாக வேண்டுமெனவும், ரயில்வே நிலைய வரம்புகளில் வேகக் கட்டுப்பாடு நிச்சயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும், எஞ்சின் சீராக உள்ளது என்று அதிகாரிகள் அங்கீகரித்த பிறகே வண்டிகள் எடுக்கப்பட வேண்டுமென்பதும், ஊழியர்கள் வேலை நேரம் குறைக்கப்பட வேண்டுமென்பதும் நாம் அளித்த கருத்துக்களாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ரயில்வே தடங்களில் ஆட்கள் இல்லாத கேட்டுகள் (அன்மேன்டு கேட்ஸ்) இருப்பதால் சிலபல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இது சம்பந்தமாக அரசாங்கம் அந்தக் குழுவிடம் எடுத்துக் கூறியதா ? ரயில்வே இலாகாவில் இருந்து அந்த இடங்களில் ஆட்களைப் போடாவிட்டாலும் இந்த அரசாங்கம் அந்தப் பகுதிகளில் ஆட்களைப் போட முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கம் அதைப்பற்றி ஏற்கனவே சொல்லாமல் இருந்தாலும் இந்தக் கேள்வியின் மூலமாக ரயில்வே இலாகாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் என்று கருதுகிறேன்.

திரு. கே. விநாயகம் : இந்தச் சர்க்காரின் அனுபவத்தை யொட்டி செய்யப்பட்ட சிபாரிசுகளில் எந்தெந்தச் சிபாரிசுகள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன ? இப்போது அதிலே திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சரவை கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நம்முடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறோம். அவற்றில் எவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று வகைப்படுத்திச் சொல்லாவிட்டாலும் அவைகளில் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

மதுராந்தகம் சப்-மாஜிஸ்ட்ரேட்

***67 வினா—திரு.** கரு. சிமைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் 22—3—1969-ம் தேதி மதுராந்தகம் சப்-மாஜிஸ்ட்ரேட் பட்டப்பகலில் தாக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

1970 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ)—துணை மாஜிஸ்ட்ரேட் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களைத் தாக்கிய தாகச் சொல்லப்படும் சுந்தரம் மீது மதுராந்தகம் காவல் நிலையத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை 110 (e) & (f) பிரிவின் கீழ் 222/1969-ம் எண் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் குற்றவாளி 13—8—1969 அன்று எம்.சி. 128/1969-ம் எண்ணில் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 119-வது பிரிவின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.

திரு. கே. விநாயகம்: இந்தக் குறிப்பிட்ட மாஜிஸ்ட்ரேட் எந்தக் காரணத்திற்காக இது மாதிரித் தாக்கப்பட்டார்? இது முக்கியமாகக் கவனம் செலுத்தப்படவேண்டிய பிரச்சனை. மாஜிஸ்ட்ரேட்டுகளையும், ஜட்ஜுகளையும் தாக்குவது என்ற நிலைமையை இப்படியே விட்டு வந்தால் நாட்டில் நீதி நிலைமை இருக்காது. ஆகவே, எதிர்காலத்தில் இந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் இருக்க என்ன பாதுகாப்பை மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கும் ஜட்ஜுகளுக்கும் அரசாங்கம் தர முயற்சிக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தியாவினுடைய பெரிய நீதிபதியையே கூட ஆபத்து அணுகியது என்பதை மறந்து விடுவதற்கில்லை. சுந்தரம் என்பவர் பல மதுவிலக்கு வழக்குகளில் தண்டனை பெற்றவர். மாஜிஸ்ட்ரேட்டைத் தாக்கியதற்கு அது காரணமாக இருக்கலாம். அவர் மீது உடனடியாக வழக்குத் தொடரப்பட்டது. இன்னொரு கோர்ட்டிலே அந்தக் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

THIRU T. MARTIN: May I request the Hon. Minister to state whether after this incident, Government have given Police protection to Magistrates and Judges, and if so, the particulars thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்படியே சென்று கொண்டிருந்தால் பிறகு வக்கீல்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும்.

Complaints of amplifier nuisances

*68 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Control Room in the Office of the Commissioner of Police, Madras City has been directed to deal with complaints of amplifier nuisances?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம். ஒலிபெருக்கிப் புகார்கள் வந்தால் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.